[1979 ஏப்ரல் 21

*வினா எண் 772– திரு செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை சத்து 8·5% இருக்கும் கரும்புக்கு டன் 1-க்கு ரூ.100 கொடுக்க மத்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளவாறு கரும்பு விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது?

(ஆ) $4\frac{1}{2}$ கோடி பழைய பாக்கியையும் வசூல் செய்து கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ)&(ஆ) : அவையின் முன் அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

கரும்பு பயிரிடல்

*வினா எண் 773—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ் நாட்டில் கரும்பு பயிரிடும் பரப்பளவை குறைக்குமாறு மத்திய அரசு மாநில அரசுக்கு அண்மையில் யோசனை கூறி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :

(அ) பத்திரிகைச் செய்தி தவிர வேறு இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, இந்தச் சர்க்கரைச் சத்து 8.5 என்று கணக்கிடுகின்ற நேரத்தில் சர்க்கரை ஆலைகளில் பல தவறுகள் நடப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதைக் கண்காணிக்க அரசு தனியாக ஒரு அதிகாரியை நியமித்து அதைச் சரியான முறையிலே கணக்கிடத் தகுந்த திட்டங்களை வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் திறன் என்று சொல்லப்படுகின்ற அந்த சுகர் ரிக்கவரித் தன்மை ஒவ்வொரு ஆலைக்கும் ஒவ்வொரு விதமாக வந்து கொண்டிருக்கிறது என்று விவசாயப் பெருங்குடி மக்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவை நடவடிக்கைகளின் மூலமாக சீர் செய்யப்படும்.

---

*1062-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS